**In the Court of the District Munsif, Eraniel**

Original Suit No.138/2012 Date:31.01.2025

(P.W.1)-ரமேஷ்

குறுக்கு விசாரணை

1. எங்கள் ஊரில் ஊர் கமிட்டி உள்ளது என்றால் சரிதான். அந்த கமிட்டியில் தலைவர், செயலாளர், பொருளாளர் பதவி உள்ளது என்றால் சரிதான். நான்மேற்சொன்ன நிர்வாக குழுவில் பொறுப்பில் உள்ளேனா என்றால் இல்லை. நங்கன்விளை ஊர் சார்வில் ஆஜர் ஆவதற்கு அதிகாரபத்திரம் ஏதும் வழங்கவில்லை என்றால் சரிதான். என் வீட்டின் முகவரி, கதவு எண் 2/89, நங்கன்விளை, காரங்காடு அஞ்சல் ஆகும். மேற்படி முகவரியை நிருபிக்கும் ஆவணம் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய் முடியுமா என்றால் முடியும். என்னுடைய சத்திய பிராமாண வாக்குமூலத்தில் வீட்டு எண் முகவரி குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். என் ஆதார் அட்டை, கடவு சீட்டு மற்றும் ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். என்னுடைய வீடு சுப்பிரமணியன்புரம் என்ற இடத்தில்தான் உள்ளது என்றால் சரியல்ல. சுப்பிரமணியன்புரம் என்ற ஊர் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்சொன்ன சுப்பிரமணியன்புரம் என்ற ஊர் இலந்தன்விளையை தாண்டிதான் உள்ளது என்றால் சரிதான். இலந்தன்விளையில் சால்வேசன் ஆர்மி கிறித்துவ ஆலயம் உள்ளது என்றால் சரிதான்.

2. மேற்சொன்ன சுப்பிரமணியன்புரம் என்ற ஊரை தாண்டிதான் நங்கன்விளையில் சிவன் கோவில் உள்ளது என்றால் சரிதான். பேயன்குழி பாலத்திலிருந்து ஆலன்விளை வரை உள்ள ஊரின் பெயர்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அவை நெட்டாங்கோடு செல்லும் சாலை, பண்டாரவிளை, ஒருகம்பி பாலம், ஒரு ஊசிக் காட்டு சிவசுடலை சுவாமி திருக்கோவில் செருப்பங்கோடு, அதை தாண்டி செல்லும்போது புலியடி விளை செல்லும் சாலைக்கு அடுத்து இலந்தன்விளை உள்ளது என்றால் சரியல்ல. இலந்தன்விளையை தாண்டிதான் சுப்பிரமணியன் புரம் உள்ளது என்றால் சரிதான்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

(ஒப்பம்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல் (பொறுப்பு)